IBSL
INSURANCE
BOARD OF SRI LANKA

INSURANCE BOARD OF SRI LANKA
(Established under Act No. 43 of 2000)

Level 11, East Tower, World Trade Centre, Echelon Square, Colombo 1.
Tel. General : +94 11 2396184-9, Fax : +94 11 2396190 Website : www.ibsl.gov.lk

# ஊடக அறிக்கை

## காப்புறுதி தொழில் செயலாற்றுகை – 2012 முதல் அரையாண்டு

காப்புறுதி தொழிலானது 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதி தொழில் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் நியதிகளுக்கமைவாக இலங்கை காப்புறுதிச் சபையினால் ஒழுங்குபடுத்தப்பட்டு மேற்பார்வை செய்யப்படுகினறது.

காப்புறுதிச் சபையுடன் பதிவு செய்துள்ள இருபத்திரெண்டு (22) காப்புறுதிகளில் பன்னிரெண்டு (12) இணைந்த கம்பனிகளாகும். (பொது மற்றும் நீண்டகால (ஆயுட்) காப்புறுதி வியாபாரம் இரண்டினையும் மேற்கொள்கின்றது.) ஏழு (7) நிறுவனங்கள் பொது காப்புறுதி வியாபாரத்தினை மேற்கொள்வதற்காக பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் மூன்று (3) கம்பனிகள் நீண்டகால (ஆயுட்) காப்புறுதியை மாத்திரமே மேற்கொள்கின்றன. எவ்வாறாயினும், பொது காப்புறுதி வியாபாரத்தினை மேற்கொள்வதற்காக பதிவு செய்யப்பட்ட கம்பனியொன்று 2009 ஆகஸ்ட் 05 ஆம் திகதியிலிருந்து காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

2012 ஜுன் 30 ஆம் திகதி வரையான ஆறு (06) மாதங்களுக்கான நீண்டகால காப்புறுதி வியாபாரங்கள் மற்றும் பொது காப்புறுதியிலிருந்து மொத்த தேறிய எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானம் ரூபா 43.78 பில்லியனாக காணப்பட்டதுடன் இது 2011 இன் முதல் ஆறு மாதங்களுடன் ஒப்பிடுகையில் 2012 இன் முதல் அரையாண்டின் போது 13.45 சதவீத வளர்ச்சியொன்றினை பிரதிபலித்துக் காட்டியுள்ளது. 2011 இன் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் பொதுவாக காப்புறுதி வியாபாரம் மற்றும் நீண்டகால காப்புறுதி வியாபாரம் என்பன முறையே 20.70% மற்றும் 4.28% ஆக எழுதப்பட்ட காப்புறுதிக் கட்டண வருமானமாக காணப்பட்டது. இவ்வருமானம் பொது காப்புறுதி வியாபாரத்தில் ரூபா 26.062 பில்லியனாக (2011 மதல் அரையாண்டில் - 21.56 பில்லியன்) காணப்பட்டதுடன் நீண்டகால காப்புறுதி வியாபாரத்தின் வருமானமும் 2012 இன் முதல் 6 மாதங்களின் போது 17.76 பில்லியனாக (2011 முதல் அரையாண்டில் - 17.04 பில்லியன்) காணப்பட்டது.

காப்புறுதி கம்பனிகளின் மொத்த ஆதனம் 2011 டிசெம்பர் 31 அன்று பதிவாகிய ரூபா 265.41 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2012 ஜுன் 30 ஆம் திகதி அன்று ரூபா 279.10 பில்லியனாக அதிகரித்திருந்தது.

காப்புறுதி தொழில் ஒழுங்குபடுத்தல் சட்டத்தில் 25 ஆம் பிரிவின் நியதிகளுக்கமைவாக, பொது காப்புறுதி வியாபாரத்தின் தொழில்நுட்ப ஒதுக்குகளில் 20 சதவீதமான ஆதனங்களும் ஆயுட் காப்புறுதி வியாபாரத்தின் நீண்டகால காப்புறுதி நிதியத்தின் ஆதனங்களில் 30% இனையும் அரசாங்க பிணையங்களில் முதலீடு செய்யப்படுதல் வேண்டும். இது ஒரு கட்டாயத் தேவைப்பாடு என்பதுடன் அனைத்து காப்புறுதிக் கம்பனிகளும் இதற்கு இணங்கியொழுக வேண்டும். அரசாங்க பிணையங்களில் முதலீடு நீண்டகால காப்புறுதி வியாபாரத்தின் மொத்த ஆதனங்களில் 50.21% இனை பிரதிபலிப்பதுடன் (2011 முதல் அரையாண்டில் - 56.06%) 2012 இன் இரண்டாவது காலாண்டின் இறுதியில் பொது காப்புறுதி வியாபாரத்தின் மொத்த ஆதனங்களின் 29.60% இனைப் பிரதிபலித்தது (2011 முதல் அரையாண்டில் 26.50%).

காப்புறுதி தொழில் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் 98 ஆம் பிரிவின் நியதிகளுக்கமைவாக, காப்புறுதிக் கம்பனிகளினால் நிராகரிக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பான காப்புறுதியாளர்களின் முறைப்பாடுகளை சபை விசாரித்து வருகின்றது. இக்காலப்பகுதியின் போது, இலங்கை காப்புறுதிச் சபையானது மொத்தமாக அத்தகைய 195 முறைப்பாடுகளை விசாரணைக்குட்படுத்தயுள்ளது.

ஐம்பது (50) காப்புறுதி தரகுக் கம்பனிகள் காப்புறுதி தொழில் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் 82 ஆம் பிரிவின் நியதிகளுக்கமைவாக காப்புறுதிச் சபையுடன் பதிவு செய்து கொண்டுள்ளதுடன், தற்பொழுது காப்புறுதி தரகு வியாபாரத்தில் ஈடுபட்டும் வரும் அதேநேரம் பொது காப்புறுதி வியாபாரத்திலும் பிரதானமாக கவனம் செலுத்தி வருகின்றது. காப்புறுதி தரகு கம்பனிகளின் மூலம் பொது காப்புறுதி வியாபாரம் மற்றும் நீண்டகால காப்புறுதி வியாபாரம் இரண்டிலுமிருந்து பெறப்பட்ட மொத்த வருமானம் 2011 இல் இதே காலப்பகுதியின் போது காணப்பட்ட ரூபா 4.94 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2012 இன் அரையாண்டின்போது ரூபா 6.31 பில்லியனாக காணப்பட்டது.

இலங்கை காப்புறுதிச் சபை
2012 ஒக்டோபர் 18